**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.42/2025**

**தேதி : 13.02.2026**

**(வா.சா.2 ) – திரு. சிவக்குமார்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ளார். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் முத்துக்குமார் என்பவர் மீது பண வசூலுக்காகத் தாக்கல் செய்துள்ளார். நான் முத்துக்குமாரை பார்த்துள்ளேன். முத்துக்குமார் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா, அவரை பார்த்துள்ளேனா என்றால் அவரை நான் இன்று பார்க்கவில்லை. வாதி எனக்கு நண்பர். என்னுடைய நிரூபணத்தில் கண்டுள்ள விபரங்களை வழக்கறிஞரிடம் ராமகிருஷ்ணன் சொன்னாரா என்றால் ராமகிருஷ்ணன் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார்.

2. முத்துக்குமாரை நான் எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் பணம் வாங்க வந்தபோது பார்த்தேன். அவர் பணம் கேட்க வந்தபோதும் பார்த்தேன். முத்துக்குமார் பணம் கேட்க வந்தபோது பார்த்தேன். எத்தனை மணிக்கு வாதி பணம் கொடுத்தார் என்றால் மதியம் 12.00 மணிக்குமேல் பணம் கொடுத்தார். கடனுறுதிச் சீட்டு வெள்ளைப் பேப்பரில் எழுதப்பட்டதா, காங்கர் பேப்பரில் எழுதப்பட்டதா என்றால் காங்கர் பேப்பரில் எழுதப்பட்டது. கடனுறுதிச் சீட்டு ராமகிருஷ்ணன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான் வாதியின் வீட்டிற்குச்சென்றபோது வாதி மற்றும் பிரதிவாதி அங்கு இருந்தார்கள். வேறு யார் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் இல்லை.

3. ராமகிருஷ்ணன் பணம் கொடுத்ததாகச் சொல்லும்போதும் நாங்கள் மூவரும் இருந்தோமா என்றால் சாட்சிக் கையொப்பம் செய்த ராமராஜ் இருந்தார். நான் கையொப்பம் செய்யும்போது யார் யார் கையொப்பம் அதில் இருந்தது என்றால் முத்துக்குமார் கையொப்பம் இருந்தது. அதன்பிறகு ராமராஜின் கையொப்பம் இருந்தது. நான் இதற்கு முன்பாக ஏதாவது கடனுறுதிச் சீட்டு எழுதியுள்ளேனா என்றால் எழுதியது இல்லை. கடந்த 5 வருடங்களாக பிரதிவாதி முத்துக்குமார் அவருடைய சொந்த

**ஊரான தேனி மாவட்டம், அய்யம்பட்டிக்கு சென்று விட்டாரா என்றால் அங்கு சென்றுவிட்டார், வேலைக்கு இங்கு வந்து செல்கிறார். முத்துக்குமார் ராமகிருஷ்ணனிடம் எவ்வித தொகையும் கடனாகப் பெறவில்லை என்றும், நான் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.13 17:54:17 +0530

Additional Sub Judge,
Palani.